பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 18 வியாழக்கிழமை (02-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 37

# மகாசங்க ஆலோசனைப்படி ஸ்ரீலங்கா அரசு செயற்படும்

## மல்வத்தை பீடாதிபதியிடம் ஜனாதிபதி பிரேமதாஸா உறுதி

கொழும்பு, ஜனவரி 2

இனப்பிரச்சினை விவகாரம் உட்பட முக்கியமான விடயங்களில் அரசு பௌத்த மகாசங்கத்தின் ஆலோசனைப்படியே நடந்து வருகிறது. தொடர்ந்தும் அவ்வாறே அரசு நடக்கும்.

— இவ்வாறு கண்டி மல்வத்த மகாநாயக்க தேரர் வண. ரம்புக்வல விபாஸி தேரரிடம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா உறுதி தெரிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்திருக்கும் யோசனையை நிராகரிக்கும்படி பிரசாரம் செய்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று தாக்குதல் ஏதும் இல்லையாம்!

கொழும்பு, ஜன. 2

புத்தாண்டு தினமான நேற்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எந்தவித தாக்குதல் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக ''லங்காபுவத்'' அறிவித்தது. (உ-3)

## "புதுவருட" தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 2

பலாலி முகாம் படையினர் நேற்று—புத்தாண்டு பிறக்கும் வேளையில்— ''புதுவருட'' தாக்குதலை நடத்தினர்.

சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாக தொடர்ந்த ஷெல் மற்றும் தாக்குதல்களினால், பீதியுற்ற அயல் பகுதி மக்கள் புதுவருடத்தைப் பதுங்கு குழிகளில் கழித்தனர்.

நேற்றுக்காலை 7 மணியளவிலும் வளலாய், இடைக்காடு பகுதிகளில் இருந்து படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். [ஓ-126-15]

## அமைதியாக கழிந்த புதுவருடம்

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ். குடாநாட்டில் புதுவருடக் கொண்டாட்டங்கள் அமைதியாக இடம்பெற்றன.

மக்கள் தேவாலயங்களுக்கும், கோவில்களுக்கும் சென்று வழிபட்டு புதுவருடத்தைப் பரபரப்பின்றிக் கழித்தனர். (ஓ-131)

## வளலாயில் வீடுகள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

வளலாய் சல்லிப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் வீடுகள் சிலவற்றை தகர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

அதேசமயம் குடிசை வீடுகள் சிலவும், வேலிகளும் எரிக்கப்பட்டன என்றும் தெரியவந்தது.

அன்றைய தினம் மாலை 5 மணியளவில் அப்பகுதியில் ஹெலி ஒன்றும் வேட்டுக்களைத் தீர்த்தது. (ஓ-15)

## முச்சந்தி முரளி



அப்ப... உவர் தொண்டா இப்ப ஆப்பிழுத்த குரங்கின்ரை நிலையிலை எண்டு சொல்லுங்கோ ..!

## வவுனியாவில் குண்டு வீச்சு; 10 வீடுகள் சேதமுற்றன!

யாழ்ப்பாணம், ஜன. 2

வவுனியா மாவட்டம், கட்டியகுளம் பகுதியில் குடியிருப்புக்களை நோக்கி நேற்றுக் காலை ஸ்ரீலங்கா விமானங்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

மூன்று பொம்மர்கள், அவ்ரோ விமானம் ஆகியவை நடத்திய இந்தத் தாக்குதல்களினால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விவரமான செய்தி ஏதும் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

## சோவியத் யூனியனைப் போல
## இந்திய மாநிலங்களும் உடையும் நிலை வருமா?
### பிரதமர் ராவ் பதிலளிக்கிறார்

புதுடில்லி, ஜன. 2

சோவியத் யூனியனைப் போல, இந்தியாவும் உடைந்து போகும் ஆபத்து உருவாகலாம் என்ற கவலை இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவுக்கு உண்டு.

அவர் அண்மையில் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இந்த உணர்வு பிரதிபலிக்கிறது.

சோவியத் யூனியன் போல, இந்தியாவும் சிதறுண்டு போகுமா என்ற கேள்விக்குத் திரு. நரசிம்மராவ் பின்வருமாறு பதிலளித்தார்:-

மாநில அரசுகள் தமக்குக் கூடுதல் அதிகாரம் கேட்கத் தொடங்கியுள்ளன. இது விஷயம் நம் கவனத்தில் இருக்கவே செய்கிறது. மத்திய அரசு-மாநில அரசு உறவு பற்றிய சிக்கலைத் தீர்க்க நாம் நடவடிக்கை எடுத்திருப்பதில் இருந்து, இதுபற்றி நாம் கவனிக்கத் தொடங்கி விட்டோம் என்பது தெரியும்.

இது ஒரு கடுமையான விஷயம். மிகப் பொறுமையாக முடிவு காண முயற்சி செய்யாவிட்டால் விபரீதமாக திரும்பி விடும்.

இதை சுமுகமாகத் தீர்க்கவே நான் விரும்புகின்றேன். ஆனால் உடனே தீர்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. காலம் எடுக்கும் — என்றார். (அ-எ)

## 3 காவல் நிலையங்கள் நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

குடாநாட்டில் சாவகச்சேரி சங்கானை, கோப்பாய் ஆகிய இடங்களில் நேற்றுக் காலை காவல் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

சாவகச்சேரி காவல் நிலையத்தை மகளிர் படைப் பிரிவுத் தளபதி செல்வி. ஜெனாவும், சங்கானை காவல் நிலையத்தை யாழ். மாவட்டத் தளபதி செந்தாளனும், கோப்பாய் காவல் நிலையத்தை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பாவரசனும் திறந்து வைத்தனர்.

ஏற்கனவே திறக்கப்பட்டுள்ள யாழ்நகர், சுன்னாகம் மற்றும் சாவகச்சேரி, சங்கானை, கோப்பாய் காவல் நிலையங்கள் அனைத்தும் 24 மணிநேரம் செயற்படும் என்று தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் உதயனுக்குத் தெரிவித்தார். (ஓ-31-117)

## மட்டக்களப்பு நகரில் சல்லடை போட்டுத் தேடுதல்

கடந்த 30 ஆம் திகதி [திங்கள்] அதிகாலை மட்டக்களப்பு நகரம் படையினராலும், பொலீஸாராலும் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

காலை 6 மணியளவில் நகரைச் சுற்றிவளைத்த படையினர் நகருக்குள் யாரும் நுழையவோ, அங்கிருந்து வெளியேறவோ முடியாதபடி காவலில் ஈடுபட்டனர் என்றும்—

பின்னர் 12 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் அனைவரும் மட்டக்களப்பு 'வெபர்' மைதானத்திற்கும், விமான நிலையத்துக்கு அருகே உள்ள திறந்த வெளிக்கும் செல்லுமாறு அறிவிக்கப்பட்டது என்றும்—

அதைத் தொடர்ந்து படையினர் நகரில் உள்ள வீடுகளை சல்லடை போட்டு சோதனையிட்டனர் என்றும்—

விசாரணைக்காக அழைக்கப்பட்ட ஆண்களில் பலர் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3-5]

## 'மலைநாடு' நிறுவ தொண்டா முயற்சி!
### சீறுகிறது பௌத்த காங்கிரஸ்

கொழும்பு, ஜன. 2

மலையகத்தில் இந்தியத் தோட்டத் தொழிலாளருக்கு ''மலைநாடு'' ஒன்றை உருவாக்கும் நடவடிக்கையில் அமைச்சர் தொண்டமான் மெதுவாகச் சென்றுகொண்டிருக்கிறார்.

இவ்வாறு தெரிவிக்கிறது அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்.

தென்னிலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் அமைப்புகளில் ஒன்றான அ. இ. பௌத்த காங்கிரஸ் திரு. தொண்டமானின் யோசனைகளை நிராகரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் பேராசிரியர் எம். பி. ஆரியபாலா கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது;

இந்த சமரச யோசனைகள் அறிவுபூர்வமற்றவையும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவையுமாகும். சிறிய நாடான இலங்கையில் செயற்படுத்த முடியாத யோசனைகளாக அவை உள்ளன.

#### பல தனி நாடுகளை உருவாக்கும்

இந்த யோசனைகள் பெரிய குழப்ப நிலையை நாட்டில் ஏற்படுத்தும். அத்துடன் நாட்டில் மொழி, சமய மற்றும் வகுப்புவாத ரீதியில் தொடராக தனி நாடுகளை உருவாக்கும்.

சுருக்கமாகக் கூறினால்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தமது யாழ் விஜயத்தை தொண்டா மீள்பரிசீலனை செய்கிறாராம்!

கொழும்பு, ஜன. 2

அமைச்சர் தொண்டமான் தமது யாழ்ப்பாண விஜயத்தை மீள்பரிசீலனை செய்வதாகக் கொழும்பில் செய்திகள் வெளியாகி உள்ளன.

அரசாங்க சார்பு லேக்ஹவுஸ் பத்திரிகைகள் இச்செய்தியை வெளியிட்டுள்ளன.

இதேவேளை அமைச்சர் தொண்டமான் கொழும்பில் இருந்து வெளியாகும் இன்னொரு தமிழ்ப் பத்திரிகைக்கு விடுத்த புத்தாண்டுச் செய்தியில் தமது சமாதான முயற்சி வெற்றி பெறவும் அமைதி ஏற்படவும் பிரார்த்திக்குமாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின்செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட கொள்கைகளுக்கு உட்பட்டே ஐ. தே. க. உறுப்பினர்கள் தெரிவுக் குழுவுக்கு யோசனை தெரிவிக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு வடக்கு-

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஹெலி தாக்கு

நாவற்குழி, அரியாலை மற்றும் அவற்றை அண்டிய பகுதிகளிலும் நேற்று மாலை ஹெலி ஒன்று தாக்குதல்களை நடத்தியது. தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் விடுதலைப் புலிகள் ஹெலியை நோக்கி எதிர் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15-131]

## ராணுவம் சூடு; இளைஞர் காயம்

வவுனியா, பேயாடிக் கூழாங்குளம் காவலரணில் இருந்து இராணுவத்தினர் நேற்றுக்காலை 8 மணியளவில் வேட்டுக்களைத் தீர்த்தனர். அப்போது இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

பணிக்கர் புளியங்குளத்தைச் சேர்ந்த செபஸ்தியான் யேசுதாசன் [21 வயது] என்பவரே காயமடைந்தவர் ஆவார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## ஐ. நா. செயலர் பதவியேற்பு

வாஷிங்டன், ஜன 2

கடந்த பத்து ஆண்டுகளாக ஐ. நா. பொதுச் செயலாளராக பதவி வகித்து வந்த— பெரு நாட்டைச் சேர்ந்த— திரு. பெரஸ்டி குயிலர் [71 வயது] நேற்று பதவி விலகினார்.

புதிய ஐ. நா. பொதுச் செயலாளராக எகிப்து நாட்டைச் சேர்ந்த திரு. பொட்றஸ் காலி இன்று வியாழன் பதவியேற்கிறார். (உ-எ)

## நகரில் நடந்த உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜன. 2

சர்வோதய தொண்டர் நிறுவனத்தின் ஊழல் மோசடிகளைக் கண்டித்து அதன் யாழ். கிளை முன்பாக நேற்று அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு புனர்வாழ்வுக்கென சர்வதேச நிறுவனங்களால் வழங்கப்பட்ட பல கோடி ரூபாவை சிங்களக் குடியேற்றத்திற்கும், சிங்களவரின் நலன்களுக்கும் செலவிடுவதைக் கண்டித்தே இந்த உண்ணாவிரதம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## அரசியல் நடவடிக்கைகளில் சர்வோதயம்

கொழும்பு, ஜன. 2

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனமாக இயங்கி வந்த சர்வோதய இயக்கம் இனி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [த]

## ஜனாதிபதி இன்று நாட்டு மக்களுக்கு உரை

கொழும்பு, ஜன. 2

ஜனாதிபதி பதவியை ஏற்ற மூன்றாவது வருட நிறைவை ஒட்டி இன்று 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10-40 மணியளவில் கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் இருந்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பழைய, புதிய கூரைத் தகரங்கள், Nursery Class உபகரணங்கள், விற்பதற்காக வைத்திருப்பவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். இயக்குநர், இருபாலை [எக்ஸ்பிறஸ்] கல்வி நிலையம், இருபாலைச் சந்தி, கோப்பாய். [4463]

### மணமகன் தேவை

இந்து, 26 வயது நிரம்பிய, A/L படித்த, திருவோண நட்சத்திர மணமகளுக்கு, பட்டதாரி, வங்கி மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. குறிப்புடன் தொடர்பு: இல. 831, C/O உதயன். (4464)

### பழைய புத்தகங்கள்

புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், நியாய விலையில் கொள்முதல் செய்ய நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ். பழைய புத்தகக் கடை, 32, அருச்சுனா, (ஸ்ரான்லி) வீதி. [19175]

### இலவச திருமண சேவை

27 வயது B. A. அவிட்டம் 2, லக்கினத்துச் செவ்வாய், உயரம் 5½' கொழும்பு ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. திருமண சேவையை நாடுபவர்கள் ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4477)

### வாரத்தாள் கலண்டர்

அஷ்டலக்ஷ்மி வாரத்தாள் கலண்டர் 1992, பொது அறிவுப் போட்டி பரிசு ரூபா 1000/- விவரங்களுக்கு உங்கள் விற்பனையாளரை நாடுங்கள். [4473]

---

**சைன் கல்வியகம்**

(கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக)
கோப்பாய்.
Reg. No - 68

**A/L 93**

தூய/பிரயோக கணித வகுப்புகள்

**ஆரம்பம்:**
**04-01-1992**
காலை 7-00—10-00

ஆசிரியர்:
திரு. R. ஜெகன்
[4470]

---

**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு: 05-04-1938
உதிர்வு: 14-01-1991

**அமரர் முருகுப்பிள்ளை தர்மதாசன்**

(கிராம சேவையாளர் தரம் 1 சுழிபுரம்)

திதி: 02-01-1992

கிராமத்தின் தலைமகனாய்
திகழ்ந்த உங்கள்
கீர்த்திமிகு சேவையினையும்
பறித்த காலன்
குடும்ப ஒளிவிளக்கினை
அணைத்திட்டானே!
குலமகனே, நினைவுகளை
மறப் போமோ?

பாசமான அப்பாவின்
நினைவாக
**மனைவி, பிள்ளைகள்**

கலைநகர்,
சித்தங்கேணி. (18997)

---

**A/L MATHS**

திரு. குணசிங்கம்
B/Sc Hons

**93 A/L**
12-00 பகல்
Pure - திரிகோணகணிதம்
1-00 பி.ப
App. - நிலையியல்

**92 A/L**
10-00 மு.ப
Pure - சிக்கலெண்
11-00 மு.ப
App. - எளிமையிசை இயக்கம்

**93 A/L பிரிவு II**
ஆரம்பம்:
**9-1-1992**
3-0 பி.ப

**Personal New Science Centre,**
எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[சி/1245]

---

**வி சட**
**விலங்கியல் வகுப்புகள்**

ஆர். ஈஸ்வரதாசன்
B. Sc (Cey)

**93 A/L**
**புதிய பிரிவு**
**92 A/L**
**புதிய பகுதி**

ஆரம்பம்:
05 01 — 92

[ஆரம்பத்தில் இருந்து மட்டும் அனுமதி வழங்கப்படும்]

இல. 33,
குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[சி-12 4]

---

## அந்தியேட்டி அழைப்பு



உதயம்: 30 — 1 — 1929
அஸ்தமனம்: 24 — 11 — 1991

**திருமதி புவனேஸ்வரி நடுவில்**

''அன்புக்கு முண்டோ அடைக்குந்தாள் - ஆர்வலர் புன்கண்ணீர் பூசல் தரும்''

3-1-1992 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

- குடும்பத்தினர்.

ஆலடிச்சந்தி, நல்லூர். [19241]

---

## மரண அறிவித்தல்

### சுப்பர் பொன்னுத்துரை

நயினாதீவு, சுப்பர் பொன்னுத்துரை 1-1-1992 அன்று கொழும்பில் காலமானார். இவர் சுப்பிரமணியம் - இராமசிப்பிள்ளை ஆகியோரின் ஆசை மகனும், நாகமுத்துவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் காந்திமதி (வைத்தியசாலை, நயினாதீவு), மனோகரன் (அரச மரக் கூட்டுத்தாபனம், கொக்குவில்), சகுந்தலாதேவி (டென்மார்க்), கிருபாநிதி (கனடா), இந்துமதி (கனடா), பானுமதி (Y. M. C. A., கொழும்பு), கேதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், யோகாம்பிகை, கந்தசாமி, பஞ்சலிங்கம் (கனடா), சூரியகுமார் (டென்மார்க்), அமுதகெளரி ஆகியோரின் அன்பு மாமனாரும்,

சு. குமாரசாமி (வர்த்தகர், நயினாதீவு), மயில்வாகனம், நாகமுத்து, காலஞ்சென்றவர்களான பராசத்தி, கண்மணி ஆகியோரின் அருமைச் சகோதரரும், கனகரத்தினம், இராசம்மா, சிவக்கொழுந்து, லெட்சுமி, காலஞ் சென்றவர்களான விசுவலிங்கம், சின்னத்துரை, விசாலாட்சி ஆகியோரின் அருமை மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 2-1-1992 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**பொ. மனோகரன்** (மகன்)

114/1, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(18998)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L சனி, ஞாயிறு வகுப்புகள்**

| | | |
|---|---|---|
| 08-09 | விஞ்ஞானம் | திரு. ஜே. ஆர். சூரி |
| 09-10 | தமிழ் | திரு. கோப்பாய் சிவம் |
| 10-11 | கணிதம் | திரு. ஜெகன் |
| 11-12 | ஆங்கிலம் | திரு. விஸ்வநாதன் |
| 12-01 | சமூகக்கல்வி | திரு. கோபி |
| 01-02 | வர்த்தகம் | திரு. கருணாகரன் |

ஆரம்பம்:
**05-01 1992** [ஞாயிறு] காலை 8மணி

மு. குறிப்பு; 1. கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
2. அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும். [சி-1235]

---

## நன்றி நவிலல்



1991-12-9 வியாழக்கிழமை
தேகவியோகம் அடைந்த எமது சகோதரர்

**பிரம்மஸ்ரீ. ச. சின்னஸ்வாமிசர்மா சோமாஸ்கந்தசர்மா**

அவர்களின் இறுதிக்கிரியையின் போதும், அதற்குப் பின்னரும், இன்று வரை எம்முடன் கலந்து எமது துன்பத்தைப் பகிர்ந்து ஆறுதல் கூறி, தேறுதல் அளித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும் எமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சி. பாலசண்முகக்குருக்கள்
குடும்பத்தினர்.

'' ஸ்வேதகம் '',
அரசடி வீதி,
கட்டுடை, மானிப்பாய். (19247)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**(02-01-1992)**



அமரர்
**தம்பு சுப்பிரமணியம்**
(மலாயன் பென்சனியர்)

மலர்வு: 01 - 07 - 1903
உதிர்வு: 03 - 12 - 1991



திருமதி
**இராசமணி சுப்பிரமணியம்**
(கைதடி வடக்கு)

மலர்வு: 22 - 05 - 1922
உதிர்வு: 28 - 11 - 1991

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய், இணைபிரியாது வாழ்ந்து, கண்ணை இமை காப்பது போல எங்களைக் காத்து, வாழ்வில் வழிகாட்டியாய் இருந்து, ஒன்றாய் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வங்களே! நீங்கள் விண்ணில் நின்றும், வழிகாட்டி ஆசீர்வதிக்க இறைவனை வேண்டி, உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

10, ஒடை [ராதா] ஒழுங்கை,
வண்ணார்பண்ணை. (19033)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 06 — 1910
மறைவு: 13 — 01 — 1991

**அமரர் சிவகாமிப்பிள்ளை தில்லையம்பலம்**

திதி: 01 — 01 — 1992

பெற்று வளர்த்துப் பேணிக் காத்த
பெருந்தெய்வமே,
என்றும் எங்கள் மனதை விட்டு அகலாத
தாயாரே,
எங்கு தேடினும் கிடைத்திடாப்
பெருங் களஞ்சியமே,
எங்களுக்காக வாழ்ந்தவரே எங்கள்
அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''சிவபதி'',
புளியங்கூடல்.

இல. 10, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம்.
[19242]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# ஒழிப்பும் முளைப்பும்

புதிய வருடம் பிறந்து விட்டது. இந்த ஆண்டில் தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடக்கில், இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்று முப்படைகளின் தளபதிகளும் தனித்தனியாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

மொத்தத்தில், தமிழ்ப் பகுதிகளில் "பயங்கரவாதத்தை" முற்றாக ஒழிப்பதே ஸ்ரீலங்காப் படைகளின் இவ்வருடத்திய இலக்கு என்று தெரிவிக்கப்படுகிறது. அதனைக் கருதியே "புதிய வருடத்தில் வடக்கு-கிழக்கில் எப்படியும் யுத்தத்துக்கு முடிவு காண்பதே எமது நோக்கம்" என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னா கூறியிருக்கிறார்.

அரசாங்கமும் அரசாங்கப் படையினரும் வடக்கு - கிழக்கின் "பயங்கரவாதம்" என்பது தமிழர்களின் உரிமைப் போராட்டத்தையே குறிக்கும். சாத்வீக முறைகளில், சனநாயக வழிகளில் தமிழர்கள் தங்கள் உரிமைகளைத் தருமாறு போராடிய வேளை, அவற்றை உதாசீனம் செய்து, தமிழர்களை அடக்கி ஆள்வதற்கே சிங்கள அரசுகள் முனைந்தன. அவ்வாறே செயற்பட்டன.

சாத்வீக, சனநாயக வழிகள் தோல்விகண்ட நிலையிலேயே, தமிழ் இளைஞர்கள் உரிமைப் போராட்டத்துக்காக ஆயுதங்களை ஏந்த நேரிட்டது. இந்த யதார்த்தத்தை தெற்கின் அரசுகளும், அதிகாரிகளும் இன்னும் உணரவில்லை.

தமிழ் இளைஞர்கள் ஏதோ பொழுது போக்குக்காக அல்லது வருமானத்துக்காக போராடுகிறார்கள்; அல்லது போராளிகளாக மாறுகிறார்கள் என்று நினைக்கிறார்கள். மக்களின் ஆதரவு இல்லாமல் இத்தகைய போராட்டத்தை நடத்த இயலாது என்பதை அவர்களால் உணர முடியாதிருப்பது மிகவும் வேதனைக்கு உரியதாகும்.

1978 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து "பயங்கரவாதத்தை" பூண்டோடு ஒழிப்பதற்கு பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கா அனுப்பப்பட்டிருந்தார். ஆனால் 13 வருடங்கள் கடந்து, "பயங்கரவாதத்தை" ஒழிப்பதே இந்த ஆண்டின் இலக்கு என்று புதிய இராணுவத் தளபதி கூறுகிறார்!

இந்தப் 13 வருடங்களும் "பயங்கரவாதம்" வளர்வதை இராணுவம் பார்த்துக் கொண்டா இருந்தது?

தமிழ் மக்கள் போராடுவதற்கான மூலகாரணி என்ன என்பதை அறிந்து அதனை நிவர்த்தி செய்தால் மட்டுமே தென்னிலங்கையர் கூறும் "தமிழர் பயங்கரவாதத்தை" ஒழிக்க இயலும்!

நோய்க்கு மருந்து கையில் இருக்க, ஊரெல்லாம் மந்திரவாதியைத் தேடி ஓடுபவர்களாகவே தென்னிலங்கையர்கள் இருக்கிறார்கள்!

தமிழர்களிடம் விடுதலை உணர்வு இருக்கும் வரை, தங்களுக்குச் சேர வேண்டிய உரிமைகள் சரிவரக் கிடைக்கும் வரை அவர்கள் தொடர்ந்து போராடவே செய்வர் இது தமிழர்களுக்கு மட்டுமே உரியது என்று கூறமுடியாது. எந்த நாட்டிலும் எந்த இனத்துக்கும் பொருந்துவது.

விடுதலை உணர்வு என்பது வெட்ட வெட்டத் தழைப்பது. ஒடுக்க ஒடுக்க, ஒழிக்க, முயற்சிக்க, முயற்சிக்க மேலும் வீறு கொண்டு முளைப்பது, எழுவது, வளர்வது. இந்தச் சிறிய உளவியல் உண்மை தெரியாமல் தெற்கின் தலைவர்களும், அதிகாரிகளும் தவறான வழியில் செல்கிறார்கள்! அவர்கள் சரியான பாதைக்கு எப்போது திரும்புவார்கள்?

# பிரதேச செயலகம் நல்லூரில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

வடக்கு கிழக்கு மாகாண சபையின் நல்லூர் பிரதேசத்துக்கான பிரதேசச் செயலகம் [மினிக் கச்சேரி] நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 9-30 மணியளவில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

அந்த வைபவத்தில் யாழ். செயலக அதிகாரிகள், யாழ்.மாவட்டத்தில் உள்ள மாகாண மற்றும் அரச திணைக்களங்கள் பலவற்றின் அதிகாரிகள், பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபரும், பிரதேசச் செயலாளருமான திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பலரும் உரையாற்றினர். மரம் நாட்டும் வைபவமும் அப்போது இடம்பெற்றது.

### சாவகச்சேரியில்

அதேசமயம், சாவகச்சேரி பிரதேச அலுவலகம் நேற்று சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளையால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். [ஓ-5-15-31-117]

# பாடசாலைகள் 6 ஆம் திகதி திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ். மாவட்ட பாடசாலைகள் முதலாம் தவணைக்காக எதிர்வரும் ஆறாம் திகதியே ஆரம்பமாக இருக்கின்றன.

யாழ். கல்வி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை—

சகல அரசாங்கப் பாடசாலைகளும் இன்று வியாழக்கிழமை மீண்டும் திறக்கப்படும் என்று நேற்று இலங்கை வானொலி அறிவித்தது.

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பத்திரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப்படுவதற்கு பாவிக்கப்படும் பாடசாலைகள் மட்டும் இம் மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ-3]

# பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 2

கொழும்பில் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ். சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் மூவரில் இருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தடைசெய்யப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்காக லொறிகளில் ஏற்றினார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவர்களில் லொறிச் சாரதியும் கிளீனரும் கடந்த வாரம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் திணைக்கள எழுதுவினைஞரான மூன்றாவது நபர் தொடர்ந்தும் — மூன்று மாதங்களாக — விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். [உ-18]

# பாக். எல்லையில் முட்கம்பி அமைக்க இந்தியா முடிவு

புதுடில்லி, ஜன. 2

ஜம்மு - காஷ்மீர் முதல் குஜராத் மாநிலம் வரையான பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் முட்கம்பி வேலி அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு ஆரம்பிக்கவிருப்பதாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அறிவித்திருக்கிறார்.

நிதி வசதியைப் பொறுத்து கட்டம் கட்டமாக முட்கம்பி வேலி அமைக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

தீவிரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்யாமலும் —

பின்னர் தப்பிச் செல்லாமலும் தடுக்கவே இத்திட்டத்தைச் செயல்படுத்த இருப்பதாக அவர் கூறினார். (உ-எ)

# தமது யாழ் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிழக்கு இணைப்பை நிராகரிக்கும் மறைமுக அறிவிப்பு எனக் கருதப்படுகிறது. அதனாலேயே வடக்கு - கிழக்கு இணைப்புடன் கூடிய தமது யோசனைகளுடன் யாழ்ப்பாணம் வருவது பயன் தருவதாக அமையா என்று திரு. தொண்டமான் மீள்பரிசீலனை செய்து வருவதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

தமிழீழம் வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கோரிக்கைக்கு மாற்றான திட்டம் ஒன்றைக் கொண்டு சென்றால் மட்டுமே தமது பயணம் பயனளிக்கும் என்றும் —

இல்லாவிட்டால் யாழ்ப்பாணப் பயணம் பயனற்றதாகி விடும் என்றும் திரு. தொண்டமான் குறிப்பிட்டார் என்றும் லேக் ஹவுஸ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

"சிங்கள மக்களின் உதவியில்லாமல் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தும் திட்டம் ஏதும் வெற்றிகரமாக முடியாது. —

"மிகவும் கஷ்டமான நிலையில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு மீட்சியளிக்க நான் முயலவில்லை. யுத்தத்தை நிறுத்துமாறு அரசாங்கத்தை ஒருபோதும் நான் கேட்கவில்லை. அரசியல் தீர்வு ஒன்றைக் காணவே நான் முயல்கின்றேன்" — என்றும் திரு. தொண்டமான் கூ[illegible] துள்ளன. (அ-எ)

# வீடியோ படங்களுக்கு புலிகள் கட்டுப்பாடு

வீடியோப் படங்கள் திரையிடுவதற்கான கட்டுப்பாடுகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு இடங்களில், மீண்டும் வீடியோ படங்களை சிலர் வருமானம் கருதி திரையிட்டு வருவதைத் தொடர்ந்தே இந்தக் கட்டுப்பாடு கொண்டு வரப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

கட்டுப்பாடுகள் குறித்து வெளியான அறிக்கையின் விவரம் வருமாறு:-

★ வருமானம் கருதி எவரும் வீடியோ படங்களைத் திரையிடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

★ முன் அனுமதியின்றி பலர் கூடி சிறிய அரங்கம் போன்று தினசரி வீடியோ படங்களைத் திரையிட்டுப் பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

★ ஒரு வீட்டில் கூட வாடிக்கையாக வருமானம் கருதி வீடியோ படம் திரையிடுவது குற்றமாகக் கருதப்படும்.

★ நாட்டில் எந்த மூலையிலாவது முன் அனுமதியின்றி வருமானம் கருதியோ, சிறிய அரங்க நிலையில் பொது இடங்களிலோ தனியார் வீடுகளிலோ வீடியோ படம் திரையிடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

★ போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் ஆபாசப் படங்களையும், மனிதனின் மலிவான உணர்விற்குத் தீனி போடும் மசாலாப் படங்களையும் திரையிடுவது சமூக விரோதச் செயலாகவும், தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படும்.

இவற்றை மீறி வீடியோ படங்களைத் திரையிடுவோர் தண்டனைக்குரிய குற்றம் இழைத்தவர்களாகக் கருதப்படுவர். (உ-த)

# வட-கிழக்கு பிரச்சினையை தீர்க்க உறுதி பூணுவோம்

## ஜனாதிபதி புத்தாண்டுச் செய்தி

கொழும்பு, ஜன. 2

இதுவரை தீர்க்கப்படாதிருக்கும் வடக்கு-கிழக்குப் பிரச்சினைகளை எமது நாட்டில் உள்ள சகல இன மக்களினதும் கருத்தொருமைப்பாட்டின் மூலம் தீர்த்துக் கொள்வதற்கு உறுதி பூணுவோமாக!

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸா தமது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை சமுதாயத்தின் குறிப்பிட்ட ஒரு குழுவினரால் அல்லது பிரிவினரால் மட்டும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு பணி அல்ல. இச் சிரிய பணியை நிறைவேற்றுவதற்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா தமது செய்தியில் கூறியுள்ளார். [த-எ]

# மகாசங்க....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் பௌத்த மத தலைவர்களில் மல்வத்தை பீடாதிபதி மிக முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுக்காலை கண்டி மல்வத்தை விகாரையில் வைத்து சந்தித்தார்.

அவ்வேளை மல்வத்தை பீடாதிபதி தெரிவித்த கருத்துகளுக்கு ஜனாதிபதி பதிலளித்தார். அப்போது ஜனாதிபதி கூறியதாவது:-

நாட்டின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க அரசுக்கு மக்கள் ஆணை தந்திருக்கிறார்கள்.

சொல்லுக்குச் சொல் இந்த ஆணையை அரசு நிறைவேற்றும்.

நாட்டின் இறைமை, ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதிக்கும் எந்தத் திட்டத்திற்கும் அரசு இடமளிக்காது. எப்படியாயினும் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதில் அரசு முனைப்பாக உள்ளது.

அதேவேளை — தமிழ் மக்களின் பிரச்சினைகளை அடையாளங் கண்டு தீர்வுகாணுவதிலும் அரசு ஈடுபட்டுள்ளது,

வடக்கு, கிழக்கில் உள்ள அப்பாவி மக்களை பாதுகாப்பதில் ஆயுதப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசு முயற்சி எடுத்து வருகிறது.

பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்குத் தீர்வு காணுவதன் மூலம் உண்மையான வெற்றியைக் காணமுடியும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கருத்துடன்பாடு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு விரும்புகிறது. அரசாங்கம் ஜனநாயகத்தை மதிக்கிறது.

மகாசங்கத்தின் ஆலோசனையின்படியே அரசு என்[illegible]ந்து வருகிறது. —என்றார். (உ-எ)

# 'மலைநாடு'.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலைநாட்டில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கென 'மலை நாடு' ஒன்றை உருவாக்கும் நடவடிக்கையில் அமைச்சர் தொண்டமான் மெதுவாகச் சென்று கொண்டிருக்கிறார்.

இலங்கை—இந்திய காங்கிரஸ் என்ற பெயரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று இந்தியத் தொழிலாளர்கள் மாற்றிக்கொண்டுள்ளனர்.

நோயிலும் பார்க்க தொண்டமானின் வைத்தியம் மோசமாக உள்ளது. அவரது யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஒருவராலும் காப்பாற்ற முடியாத நெருக்கடி நிலைக்குள் நாடு சிக்கிக் கொள்ளும்.

பிரதி பொலீஸ் மா அதிபர் மற்றும் பொலீஸ் படைகளை அமைக்கும் அதிகாரங்களுடன் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அனுமதியும் பெற்றதான (முஸ்லிம் மாகாணமும் சிங்கள மாகாணமும்) கொண்ட, இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணம் இருக்கும் என்ற நிலையை ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள்.

இவற்றை பார்த்துக் கொண்டு ஏனைய மாகாண சபைகள் அமைதியாக இருக்கப் போகின்றனவா?

அவைகளும் தங்கள் சபைகளும் இணைந்து செயற்பட அனுமதி கோரும். தங்களுக்கென பிரதேச சபை அமைக்கும்படி கணிசமான எண்ணிக்கையில் வாழும் சிறுபான்மையினர் கோரிக்கை விடுத்தால், அதனை எவராலும் நிராகரிக்க முடியாது. தொண்டமானின் யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மொத்தமான முடிவு எப்படி இருக்கும்?

பிராங்கென்ஸ்டீன் இராட்சதன் [Frankenstein Monster] ஒன்றை உருவாக்கும் முயற்சியில் திரு. தொண்டமான் ஈடுபட்டிருக்கின்றார் — இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன்
## ★ க. கௌரிசங்கர் ★

காரைநகர் களபூமியைச் சேர்ந்த கனகலிங்கம் இராசபூபதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கௌரி சங்கர் இன்று தனது முதலாவது பிறந்த நாளை சுழி புரத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசை யாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், அண் ணன்மார், தங்கை - நந்தினி, மாமாமார், மாமிமார், பாட்டாமார், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவி னர்கள் அனைவரும் நாகபூஷணி அம்மன் அருள்பெற்று, பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(4455)

# C. C. A.
## கலை, வர்த்தக கல்லூரி

வெலிங்டன் சந்திக்கு அருகாமை

## A/L 93
## புதிய பிரிவு:

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — திரு. இரட்ணம்
அளவையியல் — திரு. சயந்தன்
இ. நாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. வேலாயுதபிள்ளை
வரலாறு — திரு. வேலா
அரசியல் — திரு. குமார்

**ஆரம்பம்:**
**05 - 01 - 1992**
**காலை 8.00 மணி**

[சி-1241]

# கவிதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 2

''வானதியின் கவிதைகள்'' என்ற கவி தைத் தொகுதியின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி யைச் சேர்ந்த செல்வி ஆர்த்தியின் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் முன்னணி யின் பொறுப்பாளர் செல்வி ஜெயா வெளி யீட்டுரை நிகழ்த்துவார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி, பாதிக்கப்பட்ட பெண்கள் புனர் வாழ்வுப் பிரிவைச் சேர்ந்த செல்வி மாலினி, எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், தமிழீழ கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப் பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, கவிஞர் இ. முருகையன், திரு. கணேசன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். (உ)

# ★ கலை நிகழ்ச்சி ★

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் ஆதரவில்

**"சந்தனக்காடு"** (நாடகம்)

## சாந்தன் குழுவினரின்

**''போர்க்கால ராகங்கள்''**
(இசை நிகழ்ச்சி)

காலம் : **2-1-92** (இன்று)
**3-1-92** (நாளை)

இடம் : யாழ். பரியோவான் கல்லூரி (சென். ஜோன்ஸ்)

அனுமதிச் சீட்டுக்களை நுழைவாயிலில் பெற்றுக்கொள்ளலாம். (18995)

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## சிவகாமசுந்தரி யோகசுந்தரம்

கொட்டடி யோகசுந்தரத்தின் அன்பு மனைவி வட்டுக்கோட்டை சிவகாமசுந்தரி காலமானார். இவர் சிறீகாந்தன், சோமகாந்தன் [யாழ். பரியோவான் கல் லூரி மாணவர்கள்], சுதர்சினி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி] யின் அருமைத் தாயாரும், காலஞ் சென்ற P. W. D. ஓவசியர் கந்தையாவின் [மாத் தளை] மகளும், கனகாம்பிகை [ஓய்வுபெற்ற ஆசிரியை, சித்தன்கேணி], தெய்வநாயகி, சிறீஸ்கந்தராசா [ஆசி ரியர், யாழ். பரியோவான் கல்லூரி], பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 31-12-91இல் இல. 27, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் அன்று மாலை கோம் பையன்மணல் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
A. N. யோகசுந்தரம் (ராஜா)
[கணவன்]

ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி.

[18992]

திருமதி
## கார்த்திகேயர் செல்லம்

காலஞ்சென்ற மூளாய் சைவப்பிரகாச வித்தியா சாலை அதிபர் சி. கார்த்திகேயரின் அன்பு மனைவி செல்லம் 31-12-91 இல் காலமானார். இவர் பத் மாவதி, கமலாவதி, லீலாவதி, கணேசானந்தன் [Executive, Edna Group, Colombo], சிவதேவி, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருவாளர் கள் நா. நாகலிங்கம் [இளைப்பாறிய நிர்வாக உதவி யாளர், கூட்டுறவு இலாகா], நா. வேலுப்பிள்ளை [இளைப்பாறிய கொத்தணி அதிபர், இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை], காலஞ்சென்ற வே. நவரத்தினம் [பொலீஸ் இலாகா], மற்றும் வே. மாணிக்கவாசகர் [அதிபர், கிடாத்திக்குளம் பாடசாலை], க. சிவதாசன் [ஆசிரியர், விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம்], ரஞ்ஜினி ஆகியோரின்அன்பு மாமியாரும், ஜெகதீஸ்வரி, ஸ்ரீதரன் [பரிசோதகர், தொலைபேசி திணைக்களம், கொழும்பு], ஸ்ரீகாந்தன், கலைச்செல்வி, ஸ்ரீகணேசன், ஸ்ரீபாஸ் கரன், ராஜ்குமார்] மஸ்கன்ஸ் லிமிட்., கொழும்பு], சூரியகுமார் [பொறியியலாளர் U. K.], ஜெயராணி, செல்வராணி, யோகராணி, ஜெயராஜ், பிரேம்குமார், சாந்திக்குமார், தர்சினி, ஜெயசீலன், சிவரூபன், சிவ சொரூபி, சிவலேனுகா ஆகியோரின் அன்புப் பாட்டி யாரும், மயூரி, பிரசாந்தி, பிருந்தாஜினி, விசாகா, அனுசாந்தி, கிரிசாந்தி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 1-1-92 பிற்பகல் 2 மணியளவில் மூளாய் பித்தனை மயானத்தில் நடை பெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தக வலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. நாகலிங்கம்.

மூளாய்,
சுழிபுரம்.

[4484]

# மரண அறிவித்தல்கள்

செல்வி.
## இராசம்மா

சாவகச்சேரி வடக்கு மீசா லையைச் சேர்ந்த செல்வி. இராசம்மா 1-1-1992 அன்று காலமானார். அன்னார் காலம் சென்ற சுப்பையா மீனாட்சிப்பிள்ளை தம்பதி களின் மூத்த புதல்வியும், திருமதி செ. தம்பித்துரை [ஆசிரியை மீசாலை விக்னேஸ் வர மகா வித்தியாலயம்], காலம் சென்ற பரமநாதன் (பரந்தன்), பாலசிங்கம் [பாலன்], பாக்கியநாதன் [ராசு] ஆகியோரின் அன்புச் சகோதரியும், டாக்டர் பொ. வே. தம்பித்துரை (மத்திய மருந்தகம் கைதடி), திருமதி விமலாதேவி, திருமதி சியாம் சுகுணா, திருமதி சற்குணநா யகி ஆகியோரின் அன்பு மைத் துனியும், செல்வி. சுதர்ஷினி, செல்வி. சுபாஷினி ஆகியோ ரின் அன்பு பெரியம்மாவும், பிரசன்னா, கவிதா, நிரூபன், பிரதீபன்,அர்ச்சனா, ஜீவிக்கா ஆகியோரின் அன்பு மாமியு மாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று [2-1-92] வியாழக்கிழமை பி.ப 12.30 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்
டாக்டர்
பொ. வே. தம்பித்துரை

## சின்னத்தம்பி வல்லிபுரம்

அளவெட்டி மேற்கு முதலிய கோவிலடியைச் சேர்ந்த சின் னத்தம்பி வல்லிபுரம் 1 1-92 அன்று சிவபதமெய்தி விட் டார். அன்னார் செல்லம்மா வின் அன்புக் கணவரும் இரா ஜேஸ்வரி, விக்கினேஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் அன் புத் தந்தையாரும் தியாக ராஜா, விஜயகுமார் ஆகியோ ரின் அன்பு மாமனாரும், வேல்ராஜ், ஞானவேல், சங்கீதா, கலைவாணி ஆகி யோரின் பேரனாருமாவார். அன்னாரின் தகனக்கிரியை வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற் றுக் கொள்ளுமாறு வேண்டு கின்றேன்.

தகவல்
நா. தியாகராசா
[மருமகன்]

[18996]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா

24/3, கனகரத்தினம் வீதி, அரியாலை யைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா காலமாகிவிட்டார். இவர் ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், கோமதி [இலங்கை வங்கி], பத்மாவதி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இப்ராகிம் [இலங்கை வங்கி], நித்தியானந்தன், சிவசோதி ஆகியோரின் மாமியாரும், நிமலன், நிலூஜா ஆகியோரின் பேர்த்தியாருமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் மேற்படி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கோமதி இப்ராகிம்.
[மகள்]

24/3, கனகரத்தினம் வீதி,
அரியாலை.

(4483)

## கார்த்திகேசு செல்லையா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கார்த்திகேசு செல்லையா புங்குடுதீவில் 26-12-91 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்ற கார்த்தி கேசு - பொன்னாச்சி அவர்களின் அரு மைப் புதல்வரும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலம்சென்ற தையல்முத்து மற்றும் நாகம்மா, செல் லாச்சியின் அன்புச் சகோதரரும், தளையசிங்கம், தியாகராசா, பால ராசா, நேசரெத்தினம், நேசமலர் ஆகியோரின் தகப்பனாரும், ரஞ்சித மலர், காலம்சென்ற சத்தியதேவி, வசந்தகுமாரி, கனகலிங்கம், தரும லிங்கம் ஆகியோரின் மாமனாரும், நாகரத்தினம், சோமசுந்தரம், பொன் னுத்துரை, சுந்தரராசா, அன்னபூர ணம், மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், தாரணி, பேபிஉமா ரஞ்சனி, பாரதிதாசன், காயத்திரி, கோகிலவாணி,அனிதாவாணி, அனுசா, உதயதர்சியா, கோபிகிஷ்ணா ஆகி யோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 27-12-91 வெள்ளிக்கிழமை நடை பெற்று, பூதவுடல் கேரதீவு மயானத் தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் மிகவும் கவலையுடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. சுந்தரராசா

இல. 43, மார்க்கட்,
சுன்னாகம்.

(18994)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 2-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org